# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2018**

## 12 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்
## பேச்சுப் போட்டி
## தோமஸ் அல்வா எடிசன்.

அமெரிக்காவில் உள்ள மிலான் நகரில் 1847ம் ஆண்டு பிறந்தவரே தோமஸ் அல்வா எடிசன். இவரால் பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்க முடியவில்லை. தாயாரின் உதவியுடன் வீட்டில் இருந்தே பாடங்களைக் கற்றார். சிறுவயதிலேயே குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது. எடிசன் புகைவண்டி நிலையங்களில் பத்திரிகை விற்றுப் பணம் சம்பாதித்தார். தனது ஓய்வு நேரத்தைப் படிப்பிலும், ஆராய்ச்சியிலும் செலவிட்டார். ஊக்கமும், விடாமுயற்சியும் உடையவராக இருந்தார்.

இவர் " வீக்லி கெரால்ட்" (Weekly Herald) என்ற பத்திரிகையை வெளியிட்டார். இது ஓடும் புகைவண்டியில் நிறுவப்பட்ட அச்சு இயந்திரசாலையில் இருந்து வெளிவந்தது. இந்தப் பத்திரிகையை வெளியிடும்போது இவரது வயது பதினைந்து. மேலும் இப் பத்திரிகை இவரது மொழித்திறமையையும் எடுத்துக் காட்டியது. அதுமட்டுமன்றி, உலக விடயங்களில் இவருக்கு இருந்த ஈடுபாட்டையும் காட்டியது.

எடிசனுக்கு முப்பது வயதாகும்போது மின்குமிழைக் கண்டுபிடித்தார். 1882ம் ஆண்டு நியூயோர்க் நகரம் மின்விளக்கு ஒளியில் பிரகாசித்தது. அமெரிக்கப் பத்திரிகையாளர்களால் " மென்லோ பூங்கா மந்திரவாதி" என எடிசன் புகழப்பட்டார். அவர் கண்டுபிடித்த புதுமையான பொருட்களை வைத்தே மந்திரவாதி என வர்ணிக்கப்பட்டார். இதனால் இவர் புகழ் உலகெங்கும் பரவியது. அவர் பல பொருட்களைக் கண்டுபிடித்தார். இருந்தாலும் அவர் கண்டுபிடித்த மின்குமிழே அவரது அழியாப் புகழுக்குக் காரணமாயிற்று. இன்று உலகம் இருளிலும் பகலாக ஒளிர அவரது கண்டுபிடிப்பே காரணமாகும். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இவர் வரலாறு ஓர் உதாரணமாகும்.

**********